Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -27 | 13-11-2003 | வியாழக்கிழமை | ஓசை 268

தட்டச்சு தமிழ் ஆங்கிலம்

அனைத்து வேலைகளையும் ஒரே இடத்தில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

பகலவன்

டிப்போ சந்தி இரத்தினபுரம் வீதி. கிளிநொச்சி

# சனாதிபதி சந்திரிகா–பிரதமர் ரணில் பேச்சுக்கள் இணக்கப்பாடின்றி முடிவு!

## காரசாரமான விவாதங்கள் நடந்ததாகவும் தகவல்

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் மூன்று அமைச்சுப் பொறுப்புக்கள் பலாத்காரமாக கையேற்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து நேற்று சனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையேயான பேச்சு வார்த்தை காரசாரமான விவாதங்களுடன் இணக்கப்பாடின்றி முடிவடைந்துள்ளது.**

இச்சந்திப்புக் குறித்து இரு தலைவர்களின் செயலாளர்களால் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப் பட்டுள்ளது.

இரு தலைவர்களும் அடுத்த வாரம் மீண்டும் சந்தித்து பேசுவ தென்றும் இதன்போது ஐ.தே. முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களையும் மூத்த அமைச்சர்களையும் அழைத்துப் பேசுவதென்றும் முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும் பேச்சுவார்த்தை சுமுகமாகவும், நட்புறவு அடிப்படை யில் நடைபெற்றதாகவும் அந்தக்

(8ம்பக்கம் பார்க்க...)

## விதார் ஹெல்கேசன் குழு இன்று வன்னி வருகிறது!

### அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்திக்கும்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் உள்ளிட்ட நோர்வே பிரதிநிதிகள் இன்று கிளிநொச்சி விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கலந்துரை யாடலை நடத்தவுள்ளனர்.

இலங்கை அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆரா யப்படவுள்ளது.

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் சனாதிபதி சந்திரிகா சந்திப்பு!

### தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஆராய்வு

இலங்கை வந்துள்ள நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் நேற்று சனாதிபதியைச் சந்தித்தனர். நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் மற்றும் சிறப்புத் தூதர் எரிக் சூல் ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஜான் பிராஸ்கர் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த் தையில் பங்கேற்றனர். இலங்கை யில் சமாதான முயற்சிகள், அதற் கிடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி என்பன குறித்தும் நேற் றைய பேச்சுவார்த்தையில் ஆராயப் பட்டுள்ளது.

ஏற்கனவே, நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் இலங்கைக்கு

(8ம்பக்கம் பார்க்க...)

## சனாதிபதி –ஜே.வி.பி மீண்டும் இன்று இரவு பேசுவர்!

(கொழும்பு)

சனாதிபதிக்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் இன்று இரவு பேச்சு வார்த்தை ஒன்று நடைபெறவிருக்கிறது. இதன்போது நடைமுறை நெருக்கடி அரசியல் நிலை தொடர்பாக ஆரா யப்படவுள்ளது. அத்துடன் எதிர் வரும் தேர்தல் ஒன்றின் போது எடுக்கவேண்டிய நகர்வுகள் குறித் தும் இதில் பேசப்படவுள்ளதாகத்

(8ம்பக்கம் பார்க்க...)

## முல்லை. கரையோரத்தில் கரையொதுங்கிய சடலம்

முல்லைத்தீவு முள்ளி வாய்க் கால் மேற்கு பனையடி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் பி.ப 2.00 மணிக்கு சடலம் கரையொதுங்கியது.

அப்பகுதி மக்கள் உடன் காவல் பணிமனைக்கு தெரி வித்தனர். அங்கு விரைந்த காவல்பணிமனையினரின் விசார ணையின் பின்பு முல்லை செல் வபுரத்தைச்சேர்ந்த சூசைப்பிள்ளை

(8ம்பக்கம் பார்க்க...)

## யாப்பிற்கு அமைவாக சனாதிபதியிடம் பாதுகாப்பு அதிகாரங்கள் உள்ளன

### பாராளு. உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் யாப்பிற்கு அமையவும், அடிப்படை சட்ட ங்களுக்கு உட்பட்ட வகையிலும் நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான பூரண அதிகாரங்களும் சனா திபதியிடமே ஒப்படைக்கப்பட் டுள்ளன என பாராளுமன்ற உறுப் பினர் சரத் அமுனுகம கூறியுள் ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரை யாற்றும்போதே அவர் இதனைக் கூறி யுள்ளார். அத்துடன் அரசியல் யாப்பின் மூலம் வழங்கப் பட்டிருந்த அதிகாரங்களை சனாதிபதியிடமிரு ந்து எவரும் மீளப் பெற்றுவிட முடியாதெனக் கூறியுள்ளார். இவ் விடயம் தொடர்பாக உயர் நீதி மன்றம் தெளிவான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான சகல அதிகாரங்களும் சனாதிபதியிடமே ஒப்படைக்கப்

(8ம்பக்கம் பார்க்க...)

## பேரியல் அஷ்ரப்புடன் சனர்திபதி சந்தித்துப்பேச்சு

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பை சனா திபதி சந்திரிகா நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு சனாதிபதி மாளி கையில் இடம்பெற்றது. இதன்போது தற்சமயம் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்தும் தேசிய அர சாங்க கொள்கை குறித்தும் சமா தான முன்னணியில் முஸ்லிம்களின் மூன்றாம் தரப்புப் பிரதிநிதித்துவம் கொழும்பிலும் பேசப்பட்டுள்ளது. எனினும் மேலதிக விபரங்கள் எவை யும் வெளியாகவில்லை. இதே வேளை சனாதிபதி விரைவில் ஏனைய கட்சிதலைவர்களையும் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

## திருமலை சிறையிலிருந்து 4 புலிகள் தப்பியோட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை சிறைச் சாலை யிலிருந்து 04 கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக திரு கோணமலை பொலிசார் கூறியுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 4.00 மணியளவில் இடம்பெற் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டு காவலில்

(8ம்பக்கம் பார்க்க...)

## புலிகள்–முஸ். பிரதிநிதிகள் சந்திப்பு ஒத்திவைப்பு!

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் புலிக ளுக்கும், முஸ்லிம் பிரதி நிதிக ளுக்குமிடையே மாதாந்தம் இடம் பெற்று வரும் பேச்சு வார்த்தைகள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனை அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப் பாளர் குயிலன்பன் கூறியுள்ளார்.

தென்னிலங்கையிலுள்ள

(8ம்பக்கம் பார்க்க...)

## எமது விடுதலையை வென்றெடுக்கும் நாயகனாகத் தேசியத் தலைவர் உள்ளார்!

### – தளபதிகளின் பயிற்சி நிறைவு விழாவில் கேணல் சொர்ணம்

எமது தேசியத் தலைவர், எமதுமக்கள், எமதுமண், எமது மொழி, எமது தேசம் என்பவற்றுக்கு தன்னை முற்றாக அர்ப்பணித்து எமது தேசத்தின் விடுதலையை வழிநடத்திக் கொண்டிருக்கும் வேளையில் காலத்தின் தேவைக் கேற்ப மிகவும் பொருத்தப்பாடான முடிவுகளை எடுத்து விடுதலைப் போராட்டத்தை நகர்த்தி வந்திருக் கிறார். சில சண்டைகளில் திடீர் என ஏற்படும் இறுக்க நிலையை மிகவும் சுலபமாக நிவர்த்தி செய்து எமக்கெல்லாம் போர் நுட்பங்களை யும் தந்திரங்களையும் எமக்குப் புரியும் வகையில் கற்பித்துள்ளார் என விசேட படையணியின் சிறப்புத் தளபதி கேணல்சொர்ணம் அவர்கள் நேற்று மணலாற்றில் அமைந்துள்ள லெப். கேணல் அன்பு நினைவு மண்டபத்தில் நடைபெற்ற முது நிலை இளநிலை அதிகாரிகளின் பயிற்சி நிறைவுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். இந்த மண லாற்றுக் காட்டுக்கு ஒரு தனி யான வரலாறு இருக்கிறது இக்காட் டில்வைத்து தான் கரும்புலிப் படை யணி உருவாக்கப்பட்டது. எமது தயாரிப்பான ஜொனி மதிவெடி வடி வம் பெற்றதும் இக்காட்டில் தான். இந்தக் காடு எமது போராட்டத்துக் கென பல தளபதிகளை உரு வாக்கிக் கொடுத்திருக்கிறது. இந்தக்காட்டில் இருந்து தான் நாம் பலம் பெற்றிருக்கிறோம்.

இந்தக் காட்டு வாழ்க்கையை எமது போராளிகளும் தலைமையும்

(8ம்பக்கம் பார்க்க...)




முதுநிலை, இளநிலை அதிகாரிகளுக்கான பயிற்சி நிறைவு விழாவில் அதிகாரி ஒருவருக்கு சான்றிதழை வழங்குகிறார் புலனாய்வுத்துறை சிறப்புத்தளபதி ச.பொட்டம்மான்.

## வரி விளம்பரம்

### கணினி அச்சுப் பதிப்பு

க.பொ.த.(உ/த) மாணவர்களின் செயற்திட்ட அறிக்கைக்கான மதிப்பிட்டுப் படிவம் கணினியில் அழகிய முறையில் அச்சிட்டும் ஏனைய கணினி அச்சுவேலைகள், மற்றும் கணினிப் பிரதியாக்கல் என்பனவும் செய்து பெற்றுக் கொள்ளலாம். **ICS A9** றோட் (இலங்கைவங்கி அருகா மையில்) கிளிநொச்சி. (3870)

### வயல்காணி விற்பனைக்குண்டு

பரந்தன் 4ஆம் வாய்க்காலில் இரு போகமும் செய்கை பண்ணக்கூடிய 5ஏக்கர் வயற் காணி விற்பனைக் குண்டு தொடர்பு:- திரு.க. கனகசிங்கம் **D** 7, கிளிநொச்சி, 74,**D**8, உருத்திரபுரம். (3868)

### சிறு விளம்பரம்

**Jeevasoft Systems** ஊடாக **PC- Assembling, PC- Upgrading, PC- Repair, Software Developing, Web Designing** ஆகியன செய்து கொடுக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு: திரு. கா.ஜீவலிங்கம், **C.C.** பாடசாலை அருகே புதுக்குடியிருப்பு. (3725)

# பிரதம செயற்கை உறுப்பு நிபுணர் வெண்புறா நிறுவனத்தால் கௌரவிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவத்தினரால் பிரதம செயற்கை உறுப்பு நிபுணர் மைக்மார் புளோவினைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாலை 6.15 மணிக்கு வெண்புறா நிறுவன தலைவர் வைத்தியக் கலாநிதி ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி வெண்புறா நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், யுனிசெப் வன்னி வதிவிடப்பிரதிநிதி பெனி புருவ் ஆகியோர் ஏற்றுவைத் தனர்.

தொடர்ந்து தலைமையு ரையினையடுத்து தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யுனிசெப் வன்னி வதிவிடப் பிரதி நிதி பெனிபுருவ் தமி ழர்புனர் வாழ்வுக்கழ திட்டப் பணிப்பாளர். லோரன்ஸ் திலகா ஆகியோர் சிறிப்புரை வழங்கினர். சிறப்புரையினையடுத்து வெண்புறா நிறுவன பொறுப்பாளர் வீரன் பிரதம செயற்கைஉறுப்பு நிபுணர் மைக்மார் அவர்களுக்கு வெண்புறாச்சின்னம் பொறிக்கப் பெற்ற பதக்கத்தினை அணிவித்து கௌரவித்தார்.

தொடர்ந்து செயற்கை உறுப்பு தொழில் நுட்ப பயிற்சியினை நிறைவு செய்த 18 பயிற்சியாளர் களுக்கு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சான்றிதழ்கள் வழங்கி கௌர வித்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப் பொறுப்பாளர்இனியவன்,இங்கிலாந்தைச்சேர்ந்த வைத்தியகலாநிதி முத்துவேல் ஆகியோர் கலந்து நிகழ் வினை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜோ)



# மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்பு வர்த்தமானி மூலம் வெளியீடு

மூன்று அமைச்சுக்களை பெறுப் பேற்றமை தொடர்பில் சனாதிபதியினால் விசேடவர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 6ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி உள்துறை அமைச்சு அதன் கீழ்வரும் பொலிஸ் திணைக்களம் உட்பட நிலுவைகள், பாதுகாப்பு அமைச்சு அதன்கீழ்வரும் இராணுவ கடற்படை மற்றும் விமானப் படை, ஊடக அமைச்சு அதன்கீழ் வரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் என்பன சனாதிபதியினால் பொறுப்பேற் கப்பட்டுள்ளன.

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்

*பொன்னம்பலம்*
*தேவமனோகரி (லதா)*

பிறப்பு: 18-04-1972
இறப்பு: 13-11-2001



பாசத்தின் பிறப்பிடமாய்
பண்புமிக்க எம் ஒளி தீபமே
வருடம் இரண்டு சென்றாலும்
மாறுமா எம் அன்பு
உந்தன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை
இந்நாளில் வேண்டுகின்றோம்

முகவரி:
05ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி. (3869)

குடும்பத்தினர்.

## இதயச் சுமைகளுடன் ஈராண்டு அஞ்சலி

தோற்றம்
27 - 12 - 1935



மறைவு
13 - 11 - 2001

### அமரர் இராமலிங்கம் செல்லத்துரை

ஆண்டு இரண்டு ஆனதுவோ அன்புமுகம் காண்கி,
ஈரவிழிகாயாமல் இதயச் சுமையுடனே
ஊமைகளாய் உழறுகிறோம் உமைநினைத்து உருகுகிறோம்.
சஞ்சலத்தால் எமது நெஞ்சம் தடு மாறித்துடிக்குதையா
உம்பிரிவால் எமது உள்ளம் உடைந்து நொருங்கிப் போனதையா
என் செய்வோம் என்செய்வோம் என்று மனம் தேறி
கண்ணன் கழல் அடியில் களித்து அமைதி பெற
பிரார்த்திக்கும்

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரன்.**

நிரந்தர முகவரி,
மல்லாகம்,
யாழ்ப்பாணம். (3865)

தற்காலிக முகவரி,
கனகபுரம்.
கிளிநொச்சி.

# குடாநாட்டு கடற்கரையோரப் பகுதிகளில் கடலரிப்பு அதிகரிக்கும் நிலை உருவாக்கம்!

(யாழ்ப்பாணம்)

தீவகம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற கடற்கரைகளைப் பாதுகாப்பதற்குரிய கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடந்த 25 ஆண்டுகளாகக் குடாநாட்டில் மேற்கொள்ளப்படாததால் குடாநாட்டுக் கடற்கரைகளில் கடலரிப்புக்கள் அதிகமாகும் நிலை தோன்றியுள்ளதாகக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

யாழ்.குடாநாட்டில் பெருமளவான கடற்கரையோரங்கள் இப்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருவதால் அங்கு மக்கள் சென்று தொழில் செய்யவும் பிற நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனுமதிக் கப்படாததாலேயே இது குறித்த கவனம் யாராலும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## காட்டிற்கு செல்லத்தடை

வடமராட்சி கிழக்கின் குடத்தனை மற்றும் மணற்காட்டுப் பிரதேச சவுக்கம்காட்டுப்பிரதேசத்துள் நுழைந்து விறகு வெட்டக் கூடாது எனப்படையினர் பொது மக்களை எச்சரித்து வருகின்றனர்.

மேற்படி பகுதியில் உள்ள தமது பாதுகாப்பு நிலைகளில் தங்கியுள்ள படையினரின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் எச்சரித்து வரும் படையினர்,

அப்பிரதேசத்துள் மக்கள் நுழைவதை தடுக்கவும் கண்காணிக்கவும் அப்பகுதிகளில் பொலிசாரை நியமித்துள்ளனர். (33)

## பின் நோக்கி நகர்வு

(கொழும்பு)

ஸ்திரமற்ற அரசியல் சூழ் நிலை காரணமாக கொழும்பு பங்குச் சந்தை மேலும் பின் னோக்கி நகர்ந்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி 1217.4 விதமாக இருந்த கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை 1184.7 வீதமாகவும், 2231.3 வீதமாக இருந்த மிலங்கா விலைச் சுட்டெண் 2147.9 வீதமாகக் குறைந்திருக் கின்றன.

## கடற்படையின் ஒத்திகையால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மற்றும் மாதகல் கடற்பரப்பில் கடற்படையினர் இரவில் போர் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபடுவதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களாக நடைபெற்றுவரும் இந் நடவடிக்கையின் போது ஒத்திகைபார்க்கும்இடத்தை அண்மித்து தொழில் செய்ய மீனவர்களுக்கு அனுமதி மறுத்துள்ள படையினர், மீறுவோர் தண்டிக்கப்படுவர் எனவும் பாஸ்பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரித்துள்ளனர். (33)

# படையினர் சேதமாக்கிய படகுகளில் மீண்டும் மீன்பிடிக்க அனுமதிமறுப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைப்பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது தாக்கிச் சேதமாக் கப்பட்ட மீனவர்களுக்குச் சொந்தமான இரு மீன்பிடி படகுகளையும் மீண்டும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுத்த படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

கடந்த மாதம் 21ம் திகதி பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களின் தொடர்ச்சியாக இரு மீன்பிடிப்படகுகளும் கட்டுமரமொன்றும் தாக்கி சேதமாக்கப்பட்டிருந்தது.

எனினும் இவ்விரு மீன்பிடிப் படகுகளும் உரிமையாளர்களால் தற்போது திருத்தம் செய்யப்பட்டு விட்ட போதிலும், அதனை மீன்பிடித்தொழிலுக்கு கொண்டு செல்ல அங்கு நிலை கொண்டுள்ள படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக முனை மீனவர் சங்கம் படைத்தரப்புடன் தொடர்பு கொண்ட போது இப்படகுகளை அனுமதிப்பது தொடர்பாக பலாலித் தலைமையகத்திலிருந்து பணிப்பேதும் கிடைக்கவில்லையென அறிவித்துள்ளனர்.

இதனிடையே கரையோரப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மேற்படி இரு மீன்பிடிப்படகுகளையும் அங்கிருந்து அகற்றுமாறு படையினர், படகுகளின் உரிமையாளர்களை தற்போது அறிவுறுத்தியுள்ளனர். (27)

## சேரன் வாணிபம்

### ஊர்தி ஓட்டுநர் பயிற்சிநெறிக்கான வேண்டுகை.

எமது வாணிபத்தினால் மேற்கொள்ளப்படும் ஊர்தி ஓட்டுநர் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :-**

1. வயது 21 - 28ற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. உயரம் 5' 3"ற்கு மேல் இருத்தல் வேண்டும்.
3. எடை 53 கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும்.
4. ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
5. வன்னிப் பெருநிலப்பரப்பில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடையோர் கீழ்க் காணும் முகவரிக்கு தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை,கல்விச் சான்று என்பவற்றுடன் 2003-11-14 நாளன்று காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

நடுவப் பணிமனை,
சேரன் வாணிபம்,
கிளிநொச்சி.

(சீ-8697)

# ஈராக்கில் நெருக்கடி அதிகரிக்கின்றது வெள்ளை மாளிகையில் அவசர ஆலோசனை!

## அமெரிக்க நிர்வாகி வாஷிங்டன் விரைவு

**ஈராக்கில் தொடரும் தாக்குதல்களால் வெள்ளை மாளிகையில் அவசர ஆலோசனைகள் நடைபெற்றுவருகின்றன.**

ஈராக்கில் நாளுக்கு நாள் அமெரிக்க இராணுவம் இழப்புக்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. இதனால் ஈராக்கின் ஆட்சியாளர்போல் பிறிமர் அவசர அவசரமாக அமெரிக்காவுக்குப் பயணமாகியுள்ளார்.

ஈராக்கில் அதிகரித்துவிட்ட தாக்குதல்கள் காரணமாக முதலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் வெளியேறினார்கள். தற்போது ஐ.நா.சபை ஊழியர்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலைமைகளினால் அமெரிக்கா ஈராக்கின் தற்போதைய நிலை காரணமாக மிகுந்த விரக்தி அடைந்துள்ளது. ஈராக்கில் ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைமைகள் காரணமாக அமெரிக்காவினால் நியமிக்கப்பட்ட இடைக்கால ஆட்சியாளர் சபையினால் எந்த விதமான புனரமைப்புப் பணிகளையும் முன்னெடுக்க முடியாத நிலைமைகளே அதிகமாக உருவாகியுள்ளது.

இதன்காரணமாகவே வெள்ளை மாளிகை அவசர ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஈராக்கில் ஸ்திரமற்றநிலை நாளுக்குநாள் அதிகரித்துள்ளது. இதனால்அதனைஎப்படிக் கையாள் வது என்பதில் அமெரிக்கா மிகுந்த சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.



நேற்று முன்தினம் குண்டுத்தாக்குதல் நடந்த பாக்தாத் நீதிமன்றம் ஒன்றுக்கு முன்னால் நடந்து செல்லும் ஒருவர். இச்சம்பவத்தில் இரு அமெரிக்கபடையினர் மற்றும் சிறைக் கைதிகளுடன் 6 பேர் காயமடைந்தனர்.



பஸ்ரா நகர வீதியொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை யடுத்து அங்கு தேடுதலில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தினரும் ஈராக்கிய பொலிசாரும் (சம்பவத்தில் 3ஈராக்கியர் பலியாகியுள்ளனர்.) இதன்போது சேதமான வாகனமும் காணப்படுகிறது.

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கில் இடம் பெற்றுவருகின்ற பயங்கரவாதத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் எவ்வகையான ஆயுதங்களையும் பயன்படுத்தத் தயங்கப் போவதில்லையென அமெரிக்காவின் இராணுவ கட்டளையிடும் தளபதி கூறியுள்ளார்.

## சனநாயகத்தை கட்டியெழுப்ப சனாதிபதி-கையூம் உறுதி

மாலைதீவில் சனநாயகத்தைக் கட்டியெழுப்பவும், மனிதவுரிமை ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிக்கவும் சனாதிபதி மகமூன் அப்துல் கையூம் உறுதி வழங்கியுள்ளார்.

மாலைதீவு சனாதிபதியாக அறாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள அவர் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தனது பதவிக் காலத்தின் போது சனநாயகத்துடன் தொடர்புடைய நிறுவனங்களை மேம்படுத்துவதே தனது தலையாய பணியாக இருக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில் மாலைதீவு மக்கள் சமூக பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படுமமெனவும் கூறியுள்ளார்.

1978 ஆம் ஆண்டு முதற் தடவையாக மாலைதீவின் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அவர் ஆசிய நாடுகளிலிலேயே மிக நீண்ட காலம் ஆட்சிப்பொறுப்பை வகிக்கும் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியப் பிரதமர் வாஜ்பாயை ஜனவரியில் பாகிஸ்தான் வருகை தருமாறு அழைப்பு

## -தகவல் அமைச்சர் புகழாரம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாயை தமது நாட்டில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டிற்கு வருகை தருமாறு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

டில்லியில் நடைபெறுகின்ற சார்க்தகவல் அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றுள்ள பாகிஸ்தான் தகவல் அமைச்சர் ரசீட் அகமத் இவ் அழைப்பினை விடுத்துள்ளார். அத்துடன் சமாதானச் செய்தியைக் கொண்டு வந்திருப்பதாகவும், தமது நாட்டின் நட்பை இந்திய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தெரிவிப்பதாகவும் கூறிய அவர் சகல நடவடிக்கைகளும் நன்மையாக நடைபெறும் என நம்புவதாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தியா-பாகிஸ்தானுக்குமிடையே நிலவி வருகின்ற சர்ச்சைகளுக்குத் தீர்வு காணக் கூடிய ஒரே தலைவர் வாஜ்பாய் என்பதைப் பாகிஸ்தான் தலைமைத்துவம் நம்புவதாகவும் கூறியுள்ளார். அத்துடன் பாகிஸ்தானில் வாஜ்பாயிற்கு நன்மதிப்பு இருப்பதாகக் கூறிய அவர் தூரநோக்க சிந்தையுடைய அவருக்கு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கக்கூடிய துணிவு இருப்பதாக அகமத் கூறியுள்ளார்.

சார்க் பிராந்தியத்திலுள்ள 07 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் சார்க் உச்சி மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூகியின் ஆதரவாளர்களில் எண்மரை விடுவிக்க இணக்கம்

மியன்மார் எதிர்க் கட்சித் தலைவி ஆங் சாங்சூகியுடன் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அவரது ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சியின் ஆதரவாளர்கள் 35பேரில் 8பேரை மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் விடுதலை செய்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகளுக்கான தூதுவர் போலோ சேர்ஜியோபிங் ஹெய்ரோ கூறியுள்ளார்.

தனது விடுதலையைத் தாம் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்னர் தனது கட்சியின் உறுப்பினர்கள் 35பேரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று ஆங்சாங் சூகி தெரிவித்தமையை அடுத்து 8பேர் விடுவிக்கப் பட்டுள்ளார்கள்.

ஏனைய 27பேரையும் விடுதலை செய்வது குறித்து மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக பிங் ஹெய்ரோ கூறியுள்ளார்.





ஜேர்மனியிலிருந்து பிரான்சுக்கு அணுசக்திக் கழிவுகள் கொண்டுவரும் ரயிலுக்கு பாதுகாப்பளிக்கும் ஜேர்மன் எல்லைக்காவல் படையினர் இந்த அணுசக்தி ஏற்றுமதிக்கு ஜேர்மனில் பலர் எதிர்ப்புக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.


# சென்னை இந்து அலுவலகத்திற்கு அதிக பாதுகாப்பளிக்க பணிப்பு

## ஜெயலலிதா கண்டனம்

சென்னையில் இந்து நாளேட்டின் அலுவலகம் மற்றும் அதன் தலைமை ஆசிரியர் ராமின் வீடு ஆகியவற்றிற்கு முன்பாக மத்திய பாதுகாப்புப் படைகளை நிறுத்திவைக்க மத்தியரசு முடிவு செய்துள்ளது.

ஆனால் இதற்கு ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவித்து இந் நடவடிக்கையை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென கூறியுள்ளார்.

துணைப்பிரதமர் அத்வானிக்கு கடிதம் எழுதியுள்ள அவர் இது தேவையற்ற உத்தரவு, மிகவும் துரதிர்ஷ்டமானதென கூறியுள்ளார். ராமிற்கு தமிழக அரசு ஏற்கனவே பாதுகாப்பு வழங்கியுள்ளதென கூறியுள்ள ஜெயலலிதா, மத்திய படைகளை அனுப்பினால் மத்திய மாநில உறவுகளை சீர்படுத்தமுடியாத அளவுக்கு சேதம் ஏற்பட்டுவிடுமென அக் கடிதத்தில் மேலும் எழுதியுள்ளார்.



மத்தியகிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்யும் வழியில் ஈராக்கின் பட்டுவோன் நகரில் போலந்து படைவீரர் ஒருவருக்கு பதக்கம் ஒன்றை அணிவிக்கும் போலந்து பிரதமர் மெசெக்மில்லர்.

# விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசிய வழக்கிலிருந்து பழ.நெடுமாறன் விடுதலை

## மற்றொரு வழக்கு காத்திருப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக தமிழர்தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மீது தொடரப்பட்ட பொடோவழக்கில் அவரைவிடுதலை செய்து திண்டுக்கல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதேநேரம் மற்றொரு பொடோ வழக்கின் விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப்பேசியமைக்குப் போதிய ஆதாரம் இல்லை என்றே பழ. நெடுமாறனை நீதிபதி சுந்தரம் விடுதலை செய்துள்ளார்.

அடுத்த வழக்கிலும் பழ.நெடுமாறன் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

# வன்னிப் பிரதேச வீதி புனரமைப்புக்களால் எவ்வித பயனுமில்லை!

வன்னிப்பெருநிலப்பரப்பிலுள்ள கிராமப்புற வீதிகள் யாவும் பலவருட காலமாக எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப் பெறாதுள்ளமையின் காரணத்தினால் அந்தந்தக்கிராமங்களில் மக்கள் போக்குவரத்தினை



மேற்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் பகுதிகள் போர் அனர்த்தம், இராணுவ ஆக்கிரமிப்பு போன்றவற்றின் காரணமாக வீதிகள் யாவும் சிதைவுற்று பலவருடகாலமாக புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பெறாது காணப்படுகின்றது.

இராணுவத்தினரால் கிளிநொச்சிநகரம் ஆக்கிரமிக்கப்பெற்றிருந்த காலப்பகுதியில் இராணுவத்தினர் தங்கள் பாதுகாப்பிற்கென பாரிய மண் அரண்களை அமைத்திருந்தனர்.

இந்த மண் அரண்கள் அமைப்பின் காரணமாக மழை வெள்ளநீர் வெளிச்செல்ல முடியாதவாறு வடிநீர்செல்லும் வாய்க்கால் பகுதிகள் மூடப்பட்டுள்ளது. இதன்காரணமாக மழைவெள்ளம் வெளியேறமுடியாது தேக்கம் கொண்டும் வீதிகளை ஊடறுத்து பாய்ந்தமையினாலுமே வீதிகள் யாவும் சீர் கெட்டுபோகவேண்டிய அவல நிலை உருவாகியது. மற்றும் மேற்படி வீதிகள் உடனுக்குடன் புனரமைப்பு மற்றும் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப் பெறாமையே இவ் வீதிகள் யாவும் மிகவும் மோசமான பாதிப்பிற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட மற்றொருகாரணமாகும்.

இராணுவத்தினரால் புதைக்கப் பெற்றுள்ள மிதிவெடி, கண்ணிவெடி அச்சுறுத்தலின் காரணமாக தற்போதும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பல பாரிய மண் அரண்கள் அகற்றப் பெற முடியாதுள்ளது. இதன் காரணமாக மழை வெள்ளம் வெளியேற முடியாது தேக்கம் கொண்டு வீதிகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

மற்றும் தற்போது பல வீதிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பெற்று வருவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பெறினும் ஒரு குறிக்கப்பட்ட காலப்பகுதிக்கு மட்டுமே அப் புனரமைப்புப் பணிகள் ஈடு கொடுக்கக் கூடியதாக அமைந்து விடுகின்றது.

வடிகால்கள் அமைக்கப் பெறாது வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடிகால்கள் அமைக்கப் பெறாது வீதிப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பெறுவதனால் மீண்டும் மழை வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய வேண்டிய நிலை உருவாகி விரைவில் வீதிகள் சீர்கெடும் நிலை உருவாகிவிடும்.

மற்றும் வீதிகளில் உள்ள நீர்ப்போக்கிகள் செப்பனிடாது, வீதிப்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் என்பதனாலும் வீதிப் புனரமைப்புப் பணியினால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

எனவே வீதிப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் பெறுவதற்கு முன்பாக வீதிகள் இருமருங்கும் வடிகால்கள் அமைக்கப் பெற்று நீர்ப்போக்கிகள் (மதகு) உகந்த முறையில் அமைக்கப் பெற்று வீதிப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பெறும் பட்சத்திலேயே வீதிப் புனரமைப்பின் உண்மையான பலாபலனை சகலரும் பெற்றுக் கொள்ள முடியும்.

தற்போது மேற்கொள்ளப் பெற்று வரும் ஏ.9 நெடுஞ் சாலை புனரமைப்பு மற்றும் கிராமப்புற வீதிப்புனரமைப்புக்கள் இடம் பெற்று வருகின்ற பொழுதிலும் பல பகுதிகளில் வடிகால்கள் அமைக்கப் பெறாது உள்ளதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி நகரப்பகுதியில் வடிகால்கள் அமைக்கப் பெறாது உள்ளதனால் மழை வெள்ளம் வீதிக் கருகாமையில் தேக்கம் கொண்டுள்ளதை காண முடிகிறது. இந்நிலையானது செப்பனிடப் பெற்ற வீதியினை மீண்டும் சேதமுறச் செய்வதாகவே அமைந்து விடுகின்றது.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மேற்படி வீதிப்புனரமைப்புப் பணிகளின் தன்மைகளை நேரடியாகச் சென்றுபார்வையிட்டு வருவதுடன், பணிகள் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான பணிப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

**கனகபுரச்சோதி**

அண்மையில் கிளி. மாவட்ட அரச செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள் குழுவிற்கு வீதிப்புனரமைப்புப் பணிகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டியதுடன் இப்படியான பணிகளை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. உடன் சீர்செய்யப் பெற வேண்டும் என்று எடுத்தியம்பியுள்ளார்.

இருப்பினும் சீர்செய்யப் பெற்றுவரும் வீதிகளின் இருமருங்கும் வடிகால்கள் அமைக்கப் பெறுவது அவசியமாகின்றது.



புனரமைப்பின் பின் வீதியின் அவலம்.

அமைக்கப் பெறாது விடின், மீண்டும் வீதிகள் சீர்கெடும் நிலை உருவாகும் என்பது திண்ணம். இதுவே உண்மை நிலையும் ஆகும்.

# தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவினரால் வீதியோரம் மரக்கன்றுகள் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழவனவள பாதுகாப்புப்பிரிவின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டவனவள பாதுகாப்புப் பிரிவினரால் வீதியோர மரக்கன்றுகள் நடுகைத்திட்டம் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது.

கடந்த 10ஆந்திகதியன்று காலை 10.00 மணிக்கு கிளி. இரணைமடுச்சந்தி வீதிக்கருகாமையில் தமிழீழ வனவள பாதுகாப்புப்பிரிவு பொறுப்பாளர் க.சக்தியின் நெறிப்படுத்தலின்கீழ் கிளி.மாவட்ட வ.வ.பா.பிரிவு பொறுப்பாளர் வையகன் தலைமையில் மரநடுகை நிகழ்வு ஆரம்பமானது.

போராளி ஜெரி, கரைச்சிப்பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் த.பு.க. கிளி.மாவட்ட பொறுப்பாளர் ஜெகா மற்றும் வனவள பாதுகாப்பு செயலக பிரதிநிதிகள், கிளிநொச்சி மத்திய கல்லூரி.ஆசிரியர் வரதன், மத்தியகல்லூரி மாணவர்கள் சார்பில் மாணவன் ஜீவமோகன், கிளிம.வி. மாணவர்கள் சார்பில் மாணவன் அரவிந்தன் மற்றும் மாணவர்களும் நிகழ்வில் கலந்து மரக்கன்றுகளை நாட்டிவைத்தனர்.

இரணைமடுச்சந்தியிலிருந்து கரடிப்போக்குச் சந்திவரை ஏ9 வீதி இருமருங்கும் தமிழீழவனவள பாதுகாப்புப் பிரிவினரால் மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாடசாலை வளாகத்துள் பொது நிகழ்வுகள் நடாத்த படையினர் அனுமதி மறுப்பு

(வடமராட்சி)

பாடசாலை நேரத்தின்போது எந்தவொரு வெளி நிகழ்வுகளையும் பாடசாலை வளவினுள் நடாத்த அனுமதிக்க வேண்டாமென யாழ். மாவட்ட படைத் தலைமை அறிவித்துள்ளது. அத்துடன் அவ்வாறான நிகழ்வுகளில் அரச அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எவரும் கலந்து கொள்ளக்கூடாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று யாழ். மாவட்ட படைத் தலைமையினால் அண்மையில், யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளி நிகழ்வுகள் எவற்றிற்கும் குறித்த பாடசாலை நேரத்தின்போது மண்டபங்களை ஒதுக்கக்கூடாதெனவும் அச்சுற்று நிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நிகழ்வுகள் எவற்றிலும் புலிக் கொடி ஏற்றிவைக்கக் கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பொது நிகழ்வுகளில் பாடசாலைச் சீருடைகளுடன் மாணவர்கள், பாடசாலை நேரத்தின்போது கலந்து கொள்வது தொடர்பாக பிரஸ்தாபித்துள்ள அச்சுற்று நிருபம், அவ்வாறு மாணவர்கள் கலந்து கொள்கின்றமையால் ஏற்படும் விளைவுகளுக்கு தொடர்புடைய தரப்புகளே பொறுப்பாளிகளாக வேண்டிவருமெனவும் எச்சரித்துள்ளது.

இதனிடையே தென்மராட்சியின் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் பாடசாலை மாணவர்கள் சீருடையில், பாடசாலை நேரத்தில் சிரமதானப் பணிகளில் அண்மையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக படைத்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபர் பாடசாலைக்கு நேரில் வருகை தந்த படை அதிகாரி ஒருவரால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

எனினும், தற்போதைய சூழலில் கல்விப் பணிப்பாளர்களுக்கு, யாழ். படைத் தலைமை எவ்வாறு இவ்வாறான பணிப்புரைகளை விடுவிக்க முடியுமென கல்வித் திணைக்கள அதிகாரிகளிடையே ஆட்சேபனைகளையும் உருவாக்கியுள்ளது.

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்ட பன்னிரு முக்கிய அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (27)

# நிக்கோட் திட்டத்தின் கீழ் கடற்றொழிலாளருக்கு கடனுதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தில் நிக்கோட் நிதி உதவித்திட்டத்தின் கீழ் U.N.D.P நிறுவனத்தினரால் வடமராட்சி கிழக்கில் உள்ள 15 கடற்றொழிலாளர் சங்கங்களுக்கும் ஒரு சங்கத்துக்கு 20 லட்சம் ரூபா வீதம் 30 மில்லியன் ரூபாவை சுழற்சி முறைக் கடனாக சமாசத்தின் ஊடாக வழங்க இருக்கிறது. வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தில் சமாச உப தலைவர் ந.குகானந்தம் தலைமையில் இது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் யாழ்மாவட்ட U.N.D.P. வதிவிடப்பிரதிநிதி U.N.D.P யின் யாழ்மாவட்ட இணைப்பாளர் கடற்புலிகளின் தளபதி லெப்ரினட் கேணல் மங்களேஸ், யாழ்மாவட்ட கடற்றொழிலாளர் உதவிப் பணிப் பாளர், யாழ்மாவட்ட கடற்றொழில் பரிசோதகர், வடமராட்சி கிழக்கு கடற்றொழில் பரிசோதகர், கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி பூரணி, கடற்புலிகளின் மக்கள் தொடர்பாளர் மாதவன் மாஸ்ரர், கடற்புலிகளின் வடமராட்சிக் கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் தீபன் உட்பட ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கத்திலிருந்தும் 3 பிரதிநிதிகள் பொது முகாமையாளர்கள் சமாசத்தின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (11)

# நாயாற்றில் குடிநீர் தட்டுப்பாடு

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் நீண்டகாலமாகக் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதற்காகப் பல முயற்சி எடுத்தும் அது பயனில்லாது போனதாகவும் தமக்குத் தண்ணீர் தாங்கி ஒன்று அமைத்துக் குடிநீர் விநியோகம் செய்து, குடிநீர்த்தட்டுப்பாட்டை நீக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

கிணறு கட்டப்பட்ட போதிலும் அந்த நீரும் சவராகவே காணப்படுவதாகவும் பக்கத்திலுள்ள கிணறு மேல் கட்டு இல்லாததினால் குளிக்கும் நீர் அனைத்தும் திரும்பவும் கிணற்றினுள் செல்வதாகவும் அந்த நீரையே தாம் பருகுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (20)

# கிடுகுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கோணாவில், யூனியன்குளம், காந்திக் கிராம மக்களுக்குத் தற்போது வீடுகள் வேய்வதற்காகக் கிடுகுகள் வழங்கப்பெற்று வருகின்றன.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிராமிய அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால், ஒக்ஸ்பாம் நிதியுதவியுடன் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 211 குடும்பங்களுக்குத் தலா 150 மட்டை கிடுகுகள் வீதம் வழங்கப்பெறவுள்ளது.

முதற்கட்டமாகக் கடந்த சில தினங்களுக்கு முன்னதாக மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 51 குடும்பங்களுக்கு இந் நிறுவனத்தினரால் கிடுகுகள் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆஸ்துமா நோய் / முட்டு நோய்

பருவமழை ஆரம்பித்துவிட்டது. கார்த்திகை மாதம் முதல் பங்குனி மாதம் வரையில் குளிருடன் கூடிய சூழலே கூடுதலாக இருக்கும். இக்காலப் பகுதி முட்டு நோய் உள்ளவர்களிற்குப் பெரும் திண்டாட்டமாகவே இருக்கும். இவர்களது பெரும்பாலான இக்காலப்பகுதி வைத்தியவிடுதிகளிலும் வாராந்த கிளினிக்குகளிலும், வெளி நோயாளர் பிரிவுகளிலுமே கூடுதலாக விரயமாகும்.

இதுவோர் நாட்பட்ட சுவாசத் தொகுதியைப் பாதிக்கும் நோயாகும்.வயது பால் வேறுபாடின்றி எல்லோரையும் பாதிக்கச் செய்யும். இது சிறுவயதோடு இருந்து, இல்லாமல் போகலாம் அல்லது ஆயுட் கைதியாக வாழ்நாள் பூராவும் இருந்து சித்திரவதை செய்யலாம். எனவே இந்நோயைப்பற்றி அறிந்திருப்பதும், அதைப்பற்றித் தெரிந்திருப்பதும் நோயை இயலுமானவரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவி செய்யும்.

## ஆஸ்துமா என்றால் என்ன?

எமது சுவாசத் தொகுதி அவரைக்குடும்பத் தாவரங்கள் போன்றது. பிரதான தண்டு நிலத்திற்குக் கீழாக எவ்வாறு கிளைத்து இறுதியில் வேர்க் கணுக்களில் நிறைவுறுகிறதோ அதேபோன்று சுவாசத் தொகுதியும் வெளிமுக்குத் துவாரத்தில் ஆரம்பித்துப் பிரதான தண்டு போன்ற வாதனாளி பின் அது இரண்டாகப் பிரிந்து வலது, இடது நுரையீரல்களிற்குள் மேலும் பல சிறிய குழாய்களாகப் பிரிந்து இறுதியில் காற்றறைகளில் முடிவுறுகிறது. இவற்றினூடாக வாயுப் பரிமாற்றம் நடைபெறுகின்றது.

சுவாசக் குழாய்களின் உள்ளிட விட்டம் வழமையிலும் குறைவாகச் சுருங்கும் போது ஏற்படுகின்ற சுவாசச் சிக்கலே ஆஸ்துமா எனப்படுகின்றது.

சுவாசக் குழாய்களின் உள்ளிட விட்டம் குறைவதற்குப் பின்வருவன காரணமாக அமையலாம்.

I. குழாய்ச் சுவர்களின் தசைகளின் இறுக்கம்.

II. குழாய்களில் ஏற்படுகின்ற அழற்சி (ஒவ்வாமை)

III. குழாய்களை அணியிட்டுள்ள கலங்களின் வீக்கம்.

IV. குழாய்களில் உற்பத்தியாகும் சுரப்புகள் (சளி)

ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ள பெரும்பாலானவர்கள் அழற்சியான சுவாசப்பைக் குழாய்களை அல்லது காற்று செல்கின்ற வழிகளைக்கொண்டுள்ளார்கள். இவர்களின் காற்று வழிகள் வழமையைவிட அதிக "கூருணர்வுள்ளவை" இவை திடீர்த் தசை இழுப்பு நிலைக்கு உள்ளாகக் கூடியவை. சில வெளிக் காரணிகளின் தூண்டலிற்குத் துலங்கலைக் காட்ட நிர்ப்பந்திக்கப்படும் போது அதிகளவில் சுருங்குதலிற்கு உட்படுவதால் ஆஸ்துமா தீவிரமடைகின்றது.

## ஆஸ்துமாவின் அறிகுறிகள்:-

i. மூச்சிழுப்பு (நெஞ்சில் கோழிக்குஞ்சு கத்துவது போன்ற சத்தம்)

ii. நெஞ்சில் இறுக்கமும் சுவாசிப்பதற்குக் கஷ்டமும்.

iii. இருமல்-பொதுவாக இரவில்.

iv. சளி உற்பத்தி

v. மூக்கால் சுவாசிப்பதில் கடினம் உள்ளவர்கள் வாய்வழியாகச் சுவாசித்தல்.

vi. இதயத்துடிப்பு வீதம் அதிகரித்தல்.

vii. உடல் நீலம்பாரித்தல்

viii. நோயாளியால் முழுமையாகக் கதைக்க முடியாமை.

ix. நோயாளி அமைதியற்றுக் காணப்படுதல்.

பொதுவாக ஆஸ்துமா நோயுள்ளவர்கள் நோய் நிலைக்கு உட்படும் போது

i. நித்திரையில்லாத இரவுகளே கூடுதலாக இருக்கும்.

ii. சாதாரண உடல் இயக்க செயற்பாடுகளைச் செய்ய முடியாமை.

iii. பாடசாலைக்கோ அல்லது வேலைத்தளத்திற்குச் செல்ல முடியாமை.

iv. அடிக்கடி வைத்தியசாலைக்கு வந்து செல்லுதல்.

போன்றனவும் காணப்படலாம்.

## ஆஸ்துமாவைத் தூண்டும் காரணிகள்:-

உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் காணப்படும் பொதுவான நோயே ஆஸ்துமா ஆகும். குறிப்பாக இது சிறுவர்களில் அதிகளவில் காணப்படுகின்றது எனினும் குறிப்பிட்ட வயதுடன் பெரும்பாலானவர்களில் இது இல்லாமல் போகின்றது. இந்நோய் பற்றி அதிகம் சிரத்தை எடுக்காதவர்கள் கூடுதலாக வாழ்நாள் பூராவும் இதன் தாக்கத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களோடு சேர்ந்து குடும்ப அங்கத்தவர்களும் அவர்களது பொருளாதார அடித்தளமும் இதனால் ஆட்டம் காண்கின்றது.

பெருமளவு வித்தியாசமான காரணிகள் அல்லது தூண்டல்கள் ஆஸ்துமாத் தாக்கத்தை அதிகரிக்கச் செய்யும்.

## ஆஸ்துமாவைத் தூண்டும் காரணிகள்:-

i.ஒவ்வாமைக்குரிய காரணிகள் (வீட்டுத்தூசி, புல், மகரந்தம், பூஞ்சண வித்திகள், செல்லப் பிராணிகளின் மயிர்கள்,சில உணவுவகைகள்)

ii. அதிகரித்த உடற்பயிற்சி.

iii. உணவும், உணவைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்களும்.

iv. வீட்டுத் தூசி, கறையான்.

v. தொற்று நோய்கள் (தடிமன்,சளிக்காய்ச்சல்)

vi. மருந்துவகைகள் (உ+ம்- ஆஸ்பிரின் போன்றன)

vii. செல்லப்பிராணிகளின் மயிர்,தோல், இறகுகள் போன்றன.

viii புகைத்தல்.

ix. மன அழுத்தம்.

**வைத்தியக் கலாநிதி பா.யூடிரமேஸ் ஜெயக்குமார்**

x.காலநிலை

xi. அதிகரித்த வேலை

## ஆஸ்துமா நோயுள்ளவர்கள் செய்ய வேண்டியது:-

தகுதியான மருத்துவர் ஒருவருடன் ஒன்றிணைந்து ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்துவது அல்லது கையாள்வது முக்கியமானதாகும்.

ஆஸ்துமாவைச் சரிவரக் கையாள்வதன் மூலம் நுரையீரல்களை இயன்றளவு திறமையாகச் செயற்படுவதையும் கடுமையான ஆஸ்துமா தாக்கத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைக் குறைப்பதையும் உறுதிப்படுத்தலாம். எனவே நோயுள்ளவர்கள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்.

i. ஆஸ்துமாவின் கடுமையை அறிதல்.

ii. தூண்டற்காரணிகளை இனங்கண்டு தவிர்த்தல்.

iii. சரியான மருந்துகளைச் கிரமமாக வைத்திய ஆலோசனைப்படி எடுத்தல்.

iv. மருந்துகளைத் தொடர்ச்சியாக எடுத்தல்.

v. மருத்துவர் மூலம் கிரமமாகப் பரிசோதனைக் குட்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல்.

## ஆஸ்துமாவிற்கான சிகிச்சை:-

இவற்றிற்குப் பயன்படும் மருந்துப் பொருட்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

i. நிவாரணிகள்

ii. தடுப்பான்கள்

**தடுப்பான்கள -**

இவை தொடர்ந்து பயன்படுத்தப்படும் போது அவை காற்று வழிகளின் அழற்சியைக் குறைக்கின்றன. தடுப்பான் காற்று செல்லும் வழியின் வீக்கத்தையும் அழற்சியையும் குறைக்கும் வகையில் தொழிற்படுகின்றன.

**பொதுவாக உபயோகத்தில் உள்ள தடுப்பான்கள்:-**

i. சைகுளோகோன்

ii. பெக்கோடைட்

iii. பெக்லோபோர்ட்

iv. பிலிக்ஸோடைட்

v. இன்டால்

இவை வர்த்தகப் பெயர்களாகும்.

**நிவாரணிகள் -**

நிவாரணிகள் போதிய கட்டுப்பாட்டை வழங்காத சிறுவர்களிலும், வயது வந்தவர்களிலும் உடற்பயிற்சி தூண்டல் ஆஸ்துமாவைத் தடுப்பதற்கும் உபயோகிக்கப்படுகின்றது.

ஆஸ்துமாவிற்கு நிவாரணம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிவாரணிகளை "காற்றுவழி விரிவாக்கிகள்" என அழைக்கலாம். இவை காற்றுவழிச் சுவர்களில் உள்ள இறுக்கித் தசைகளைத் தளர்த்துவதன் மூலம் அவற்றை விரிவடையச் செய்கின்றன.

உங்கள் நிவாரணியைப் பாவிப்பதற்கான கால இடைவெளியைப்பற்றி உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை கேளுங்கள். மிருதுவான ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டவர்கள் இடையிடையே மட்டும் மருந்துகளை உபயோகிக்க வேண்டும். கடுமையான ஆஸ்துமா உள்ளவர்கள் தொடர்ச்சியாக வைத்திய ஆலோசனைப்படி பாவிக்கலாம்.

பொதுவான வழக்கத்தில் உள்ள நிவாரணிகள்:-

i. வென்டோலின்

ii. சல்மெட்டமோல்

iii. பிரிட்னிசிலோன்

iv. தெபியூட்டலின்

**மூச்சுவாங்கிகளை உபயோகித்தல்:-**

சுவாசத் தொகுதியில் செயற்பாட்டைக் காட்டுவதற்காக நிவாரணிகளை வாய் மூலம் உள்ளெடுக்கின்றோம். இவை சமிபாட்டுத் தொகுதியில் அகத்துறிஞ்சப்பட்டு குருதிக்கூடாக சுவாசத் தொகுதியை அடைகின்றது. எனவே இவற்றின் மூலம் வேண்டத்தகாத உடலியல் செயற்பாடுகளும் உடலில் ஏற்படுகின்றன. இவற்றை இயன்றளவு தடுப்பதற்கும், உடனடி நிவாரணத்திற்குமாக மூச்சுவாங்கிகளை உபயோகப்படுத்தலாம். இவை பொதுவாக அதிக விலையுள்ளவை என்பதால் பொருளாதாரத்தில் பலவீனமானவர்கள் இவற்றைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதில் கஷ்டப்படுவார்கள்.

**யோகாசனம், மூச்சுப் பயிற்சி:-**

பெரும்பாலான நாட்பட்ட ஆஸ்துமா நோயாளர்கள் யோகாசனம், மூச்சுப்பயிற்சி மூலம் பூரணமாகக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள். யோகாசனம் மன அழுத்தத்தைக் குறைத்து மனதைச் சாந்தப்படுத்துகின்றது. மூச்சுப் பயிற்சி நுரையீரல்களின் சுருங்கி, விரியும் ஆற்றலைக் கூட்டுவதோடு, நுரையீரல்களில் வளியின் கொள்ளவையும் கூட்டுகின்றது. எனவே தகுந்த ஒருவர் மூலமாக இவற்றைக் கற்றுக்கொள்வது இயற்கையாக ஆஸ்துமாவை மட்டுமல்ல, பெரும்பாலான உடல் நோய்களையும் எம்மை நாடி வராமல் தொலைவில் வைத்திருப்பதற்கு உதவும்.

## ஆஸ்துமா நோயுள்ளவர்கள் செய்யக்கூடாதது:-

i. வைத்திய ஆலோசனையின்றி தமது சுயவிருப்பத்தில் மருந்துகளைப் பாவிப்பது.

ii. மருந்துகளை ஒழுங்காக எடுக்காதிருப்பது.

iii. தூண்டற்காரணிகளை அறிந்து அவற்றைத் தடுக்காதிருப்பது.

iv. சுதேச வைத்திய முறைகளிற்கு முன்னுரிமை கொடுக்காதிருப்பது.

v. காலாவதியான மருந்துகளைப் பாவிப்பது.

vi. நோய் அறிகுறி தென்படும் போது அதை அலட்சியப்படுத்தல்.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளது. ஆஸ்துமா நோயாளர்களிற்கு உடல் உளத் துன்பங்களும் இதனுடன் சேர்ந்தே ஆரம்பித்துள்ளது. எனவே முன் கூட்டியே நோய் நிலையைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது இராப்பொழுதுகளைப் பயனுள்ள முறையிலும் நாளாந்த செயற்பாடுகளைத் தங்குதடையின்றிச் செய்வதற்கும் வழிவகுக்கும்.

□ □ □ □ □

# மோட்டார் வண்டிகளைக் கொள்ளையிட்ட நான்கு இளைஞர்கள் வவுனியாவில் கைது!

(செட்டிகுளம்)

வவுனியாவில் நீண்ட நாட்களாக மோட்டார் வண்டிக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்த நான்கு இளைஞர்கள் வவுனியாப் பொலிசாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா நகர்ப் பகுதியில் களவாடப்படும் மோட்டார் வண்டிகள் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தனர் என்று ஆரம்ப விசாரணை மூலம் தெரிய வந்திருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் இரண்டு மோட்டார் வண்டிகளையும், மன்னார் பகுதியில் இரண்டு மோட்டார் வண்டிகளையும், மடுப் பிரதேசத்தில் இரண்டு மோட்டார் வண்டிகளையும் வவுனியா பொலிசார் கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீண்ட நாட்களாக இவர்கள் மோட்டார் வண்டி திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதனை கைதான இளைஞர்கள் நால்வரும் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

# முல்லையில் பொலித்தீன் பாவனையை தடை செய்வதற்கான விழிப்பூட்டல்

முல்லைத்தீவில் பொலித்தீன் பாவனையைத் தடுக்கும் முகமான விழிப்பூட்டல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

தற்போது சகல தேவைகளுக்கும் பொலித்தீனையே மக்கள் பாவித்து வருகிறார்கள். இதனால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி விழிப்பூட்டப்பட்டு வருகின்றது.

இக் கருத்தூட்டலினை முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரப் பணிமனை, கரைதுறைப்பற்று பிரதேசசபை என்பன நடைமுறைப் படுத்துகின்றன. (20)

நிதர்சன நிறுவனத்தின்
15ஆம் ஆண்டு நிறைவில் 2003-11-13 இன்று

ஈழத் தமிழரின் வாழ்வியலாகவும்
தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தின் வரலாறாகவும் ஒளிரும்

# ஒளிவீச்சு காண்பியச் சஞ்சிகை

100வது சிறப்பிதழ் இன்று வெளிவருகின்றது




- தொடுவானம்
- நீதி கேட்கும் நெடுந்தீவு
- தசாப்தம் கடந்து நிற்கும் கடற்புலிகள்
- வித்தாகி வீழ்ந்த களப்படப்பிடிப்பாளர்கள்
- விடுதலைத் தீப்பொறி
- சமகாலப் பார்வை
- காஞ்சிரங்குடாப் படுகொலையின் நினைவில்
- கொள்ளை போகும் கடல் வளம்
- தமிழீழப் பெண்கள் எழுச்சி நிகழ்வு
- பிரச்சினை (குறும்படம்)

ஆகிய அம்சங்களுடன்

தொடர்பு முகவரி
நிதர்சனம்
1002,திருநகர்,
கிளிநொச்சி.

புதுமெருகும்,
புதுப்பொலிவும் துலங்க
10 வருடங்களாய் ஒளிவீச்சி
100வது சிறப்பிதழாக இன்று வெளிவருகிறது.



# தமிழீழ வைப்பகம்
# தமிழரின் காப்பகம்

இன்று கிளிநொச்சியில் மத்திய மைதானத்தில்
இரவு 7.30 மணிக்கு அகலத்திரையில்
இப்படம் காண்பிக்கப்படும்.

(3666)



**சிந்தனைக்கு**

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 13-11-2003

## கனவு கலையவில்லை!

"யுத்தமொன்று மூழுமானால் அதனை எதிர்கொள்ளும் சக்தியைப் பொதுசன ஐக்கிய முன்னணி கொண்டிருக்கின்றது" என்ற பொ.ஐ.முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரிச்சட் பத்திரனவின் கூற்றுக்கள் இன்னமும் அவர்கள் மாறவில்லை என்பதனை வெளிப்படுத்தும் அறிவிப்பாகவே உள்ளது. அத்தோடு, பொ.ஐ.முன்னணியின் யுத்தம் குறித்த கனவு இன்னமும் கலையவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

பொ.ஐ.முன்னணி அரசாங்கம் தனது இறுதிக் காலத்தில் யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்குத் தயார் நிலையில் இருக்கவில்லையே ஒழிய அது போரைத் தொடர்ந்து நடத்தக்கூடிய நிலையில் இருந்ததாகக் கூறிவிட முடியாது. இதற்கு அதன் வரட்டுப் பிடிவாதம் மட்டுமே காரணமாக இருந்தது. ஏனெனில் சிறிலங்கா இராணுவம் பெரும் தோல்விகளினால் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்திருந்தது.

அதிலும் குறிப்பாகத் தீச்சுவாலை நடவடிக்கைகளில் சந்தித்த பெரும் தோல்வி, கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் தாக்குதலுக்குள்ளாகியமை போன்றவற்றால், பொ.ஐ.முன்னணி அரசாங்கம் இராணுவ ரீதியில் மட்டுமல்ல, பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியதாகியது. இதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சி என்பது எதிர்க்கணியமானதாகவும் இருந்தது.

இத்தகைய பாரிய நெருக்கடி காரணமாகவே பொதுத் தேர்தலில் சமாதானத்தை வலியுறுத்திப் போட்டியிட்ட ஐ.தே.கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றது. மறுவளமாகக் கூறுவதானால், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பொ.ஐ.முன்னணிக்கு மக்கள் அனுமதி அளிக்க மறுத்துவிட்டனர் என்றே கூறலாம்.

இதேவேளை, சிறிலங்கா இராணுவத்தினால் விடுதலைப்புலிகளை யுத்தத்தில் வெற்றிகொள்ள முடியாது என்பதும், இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வொன்றைக் காணமுடியாது என்பதை உலக நாடுகளும் தெளிவாகவே உணர்ந்திருந்தன. இந்நிலையில்தான் புதிய அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்குச் சர்வதேச நாடுகள் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

இதில்,கூறப்பட வேண்டிய முக்கிய விடயமாக இருப்பது என்னவெனில் சிறிலங்காவை ஆண்ட, ஆளும் அரசியல் கட்சிகளும் சரி, இன்று சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் அமெரிக்கா உள்ளிட்ட முக்கிய மேற்கு நாடுகளும் சரி, விடுதலைப்புலிகளை யுத்தத்தின் மூலம் தோற்கடிக்க விருப்பமின்றியோ அன்றி, தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு மதிப்பளித்தோ சமாதான முயற்சிகளுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தவில்லை.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் ஒடுக்குவதற்கு இராணுவ ரீதியில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்குப் இந்நாடுகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கிய போதும் சிறிலங்கா அரசால் அதில் வெற்றிபெற முடியாது போய்விட்டது. இந் நிலையிலேயே தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க அவை முன்வந்துள்ளன.

இந்நிலையில் பார்க்கையில், சிறிலங்காவை ஆண்டவர்களும் சரி, ஆள்பவர்களும் சரி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், அரசியற் தீர்வு முயற்சிக்கும் வந்தமையானது யுத்தத்தில் வெற்றி குறித்த கனவு கலைந்தமை காரணமாகவே ஆகும். ஆனால், இக்கனவு இன்னமும் பொ.ஐ.முன்னணியில் உள்ள பலருக்குக் கலையவில்லை என்பதையே அண்மைய அவர்களின் நடவடிக்கை வெளிப்படுத்துவதாய் உள்ளது. எடுத்துக்காட்டாகச் சனாதிபதியின் அண்மைய அரசியல் நடவடிக்கைகளைக் கூடச் சுட்டிக்காட்ட முடியும்.

இதன் மற்றுமொரு வெளிப்பாடே யுத்தமொன்றை நடத்துவதற்கு பொ.ஐ.முன்னணிக்கு சக்தி உண்டு என்ற றிச்சட் பத்திரனவின் கூற்றுக்கள் ஆகும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இராணுவ ரீதியில் மட்டுமல்ல, பொருளாதார ரீதியிலும் யுத்தம் ஒன்றை நடத்துவதற்கானதொரு நிலையில் இல்லை என்பதே சர்வதேச அரசுகளின் மதிப்பீடாகும். இதன் காரணமாக சர்வதேச அரசுகள் தற்போதைய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், ரிச்சட் பத்திரன யுத்தத்தை எதிர்கொள்ளும் சக்தி பொ.ஐ.முன்னணிக்கு உண்டு எனக் கூறுவது ஒரு புறம் வேடிக்கைகளாகவும், மறுபுறம் அவரது பொறுப்பற்ற தனத்தையுமே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அதாவது சிறிலங்கா அரசு யுத்தத்தை எதிர்கொள்ள முடியாது என உலகமே கருதுகின்ற நிலையில் பொ.ஐ.முன்னணியால் எதிர்கொள்ள முடியும் எனக் கூறுவது யதார்த்தத்தை மறுதலிக்கும் பேச்சாகும். இது நாட்டிற்கு எந்த வகையில் அனுகூலமானதாக இருக்க முடியும்.

# சனாதிபதிக்கு தேசிய பிக்குமார் சங்கம் பாராட்டு தொடர்ந்து முன் நோக்கிச் செல்லுமாறும் வேண்டுகை

(கொழும்பு)

தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்களையும் நாட்டையும் அதிலிருந்து மீட்கும் வகையில் துணிவுடன் எடுத்த நடவடிக்கைகளிலிருந்து எக்காரணங் கொண்டும் சனாதிபதி பின்வாங்கக் கூடாது என மேலும் ஒருபடி முன் சென்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தேசியப்பிக் குமார் சங்கம சனாதிபதியிடம் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது; கடந்த 2001 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதன் பின் நாடு பல பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது. தேசியப் பிக்குமார் சங்கம் என்ற வகையில் நாம் அதனை அவ்வப்போது கண்டித்து வந்துள்ளோம். அத்துடன் சனாதிபதி என்ற வகையில் அதனைத் தோல்வியுறச் செய்ய தங்களிடம் கோரிவந்துள்ளோம்.

ஒரு புறம் நோர்வேத் தூதுவரினாலும், கண்காணிப்புக் குழுவினராலும், பாதுகாப்பு அமைச்சர்கள் மூலமும் மறுபுறம் பிரதமர் மூலமும், பாதுகாப்புச் செயலர் மூலமாகவும் அவர்களின் நடவடிக்கை மூலமாகவும் நாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டன. அதுமட்டுமன்றி உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பொலிசார் தமக்கு வேண்டிய விதத்தில் செயற்பட ஐ.தே.கட்சி அவர்களுக்கு ஆதரவு வழங்கியது. எந்தப் பொலிஸ் அதிகாரிக்கும் எதிராக ஐ.தே.க. நடவடிக்கை எடுக்கத் தவறியது. இவற்றுக்கு மத்தியில் ஊடகத்துறையும் தான்தோன்றித் தனமாகச் செயற்பட்டு மக்களைத் தவறான வழிக்கு இட்டுச் சென்றன. அதனால் அரசியல் பற்றி மக்கள் அறிந்து கொள்ளவில்லை. தமது தேவைகளோடு மட்டும் திருப்தியடைய ஐ.தே. முன்னணி மக்களை வழிகாட்டியது.

இவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்ற உங்களின் துணிவு பாராட்டுக்குரியதாகும் எனக் கடிதம் குறிப்பிடுகிறது.

அன்று 2000ஆம் ஆண்டில் உங்களுக்கு எதிராகச் செயற்பட்டு ஐ.தே.க.வை ஆட்சிபீடம் ஏறறியோர் இப்போது உங்களின் செயலைப் பாராட்டிப் புகழ்பாடுகிறார்கள் எனவும், நீங்கள் மீண்டும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எமது சங்கம் பூரண ஆதரவு வழங்கும் என்றும் இந் நடவடிக்கையினால் எதிரிகள் குழப்பமடைந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க வரும் காலங்களில் மேலும் மேலும் நாட்டு மக்கள் விரும்பத் தகுந்தவாறு நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டின் பாதுகாப்பு, கலாச்சாரம், இறைமை ஆகியவற்றின் பாதுகாப்புக்கு உங்களின் தலையீடு மிகவும் அவசியமானதாகும் எனத் தெரிவித்துக் கொண்டு நல் வாழ்த்துக்களை எமது சங்கம் தெரிவித்துக் கொள்கிறது எனத் தேசிய பிக்குமார் சங்கத்தின் கடிதம் தெரிவிக்கின்றது.

# பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பிக்க அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

எதிர்வரும் 19ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பிக்க சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

சனாதிபதி ஆரம்ப தினத்தில் கலந்து கொள்வாரா? இல்லையா? என்பது குறித்து உத்தி யோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வெளியாகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் 19ஆம் திகதி பாராளுமன்றத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த பொலிஸ் தலைமையகத்தின் உதவி பெறப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதே வேளை 19ஆம் திகதிக்கு முன்னர்பாராளுமன்றக் கூடடத் தொடரை ஆரம்பிக்க ஆளும் தரப்பு மேற்கொள்ளும் தந்திரோபாயங்கள் ஒரு போதும் சாத்தியமாகாது என்று பொ.ஐ.மு. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமைப்பாளர்களை அழைத்து பேச ஐ.தே.க. தலைமை முடிவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துத் தொகுதிகளிலுமுள்ள ஐ.தே.க. அமைப்பாளர்களைக் கூட்டி தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து விளக்கமளிக்கும் வகையில் தொடர் கூட்டங்களை நடத்துவதற்கு கட்சியின் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளதாக அறிய வருகிறது.

சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் கருப் பொருளாகக் கொண்டு மாவட்டங்கள் தோறும் மேற்படி கூட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இன்று நடைபெறவுள்ள ஐ.தே.க. வின் மாநாடு பற்றியும் ஆராயப் பட்டுள்ளது.

# 2வது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 7விக்கெட்டுகளால் வெற்றி

இங்கிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கிடையே டாக்காவில் திங்களன்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி பங்களாதேஷ் அணியை 7 விக்கெட்டுக்களால் தோற்கடித்துள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 50 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணியின் றஜின்சாலே அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 27.4 ஓவரில் மூன்று விக்கட்டுக்களை மட்டும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அணியின் வீரர் பிளின்டொப் 70 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காது இருந்தார்.

இரு அணிகளுக்குமிடையே சிட்டாலகாங் நகல் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியிலும் இங்கிலாந்து அணி 7 விக்கட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. இரு போட்டிகளிலும் சிறப்பாக விளையாடிய அன்ரு பிளின்டொப் சிறப்பாட்டக்காராக அறிவிக்கப் பட்டதுடன் பிளின்டொப் ஒரு நாள் போட்டிகளில் ஆகக் கூடியதான 44 சிக்ஸர்களை அடித்த மற்றும் ஒரு முன்னால் இங்கிலாந்து வீரரான இயன் பொத்திமின் சாதனையையும் முறியடித்துள்ளார்.

# சிறந்த வீரராக ராவிட் தெரிவு

2002-2003ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான கஸ்ட்ரோல் விருது ராகுல் ராவிட்டுக்கு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த திங்கள் பெங்களூரில் நடைபெற்ற வைபவமொன்றில் அவருக்கு இவ் விருது வழங்கப் பட்டதுடன் ரூ.50 லட்சம் பணப் பரிசும் கிடைத்தது. முன்னாள் வீரர்கள் 200 பேரைக் கொண்ட தெரிவுக்குழுவினால் இத் தெரிவு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறிநாத் ஓய்வு

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜவசல் சிறிநாத் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வு முடிவை நேற்று முன்தினம் அறிவித்தார்.

முழங்கால் உபாதையினால் உலகக் கிண்ணத் தொடருக்குப் பின் அணியில் இருந்து ஒதுங்கிய சிறிநாத் மேற்கொண்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையில் தனது முடிவை அறிவித்ததாகத் தெரிவித்தார்.




# முதுநிலை, இளநிலை அதிகாரிகளுக்கான பயிற்சி நிறைவு விழாவில்...









## சமாதான முயற்சி காரணமாகவே ஐ.தே.மு.அரசாங்கத்தை ஆதரிக்கிறோம்!

### த. தே. கூட்டமைப்பு பிரதமரிடம் தெரிவிப்பு

சமாதான முயற்சி தொடர்பாக மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் சமாதான முயற்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குமென்று சமாதான முயற்சியை அர்த்தமுள்ள விதத்தில் தொடர்ந்து மேற்கொள்ளும் பொறுப்பிலிருந்து அரசாங்கமும் பிரதமமந்திரியும் ஒதுங்கிவிடக்கூடாது எனறும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழு (நேற்று) புதன்கிழமை மாலை கொழும்பு அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது வலியுறுத்தியது. பிரதமர் - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்திப்பு குறித்து கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு அரசியல் கட்சிகளின் தலைவர்களான இரா.சம்பந்தன் (தமிழர் விடுதலைக் கூட்டணி), அ.விநாயகமூர்த்தி (தமிழ் காங்கிரஸ்), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்) கையொப்பமிட்டு பத்திரிகை அறிக்கையொன்றை வெளியிட்டனர். இப்பத்திரிகைக் குறிப்பில்,

தற்போதைய அரசியல் நெருககடி நிலையில் தமது அரசாங்கத்திற்கு ஆதரவளித்ததற்காக பிரதமர் ஆரம்பத்தில் கூட்டமைப்புக்கு நன்றி தெரிவித்தமை உட்பட சனாதிபதி உடனான சந்திப்பின்போது பிரதமர் ரணில் சனாதிபதியிடம் வலியுறுத்திய விடயங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சமாதான முயற்சியை தொடர வேண்டியதன் அவசியத்தை தாம் சனாதிபதிக்கு வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திவயின வெளியீட்டை நிறுத்துமாறு உத்தரவு

(கொழும்பு)

உபாலி பத்திரிகை நிறுவனத்தின் சிங்களப் பத்திரிகையான "திவயின" வெளியிடப்படுவதை நிறுத்துமாறு கொழும்பு வர்த்தக நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணை இம்மாதம் 27ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் வரை இந்தத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்றும் நீதி மன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உபாலி கூட்டுக்கம்பனியின் ஸ்தாபகரான அனுஜா விஜயசுந்தரவின் சகோதரி தாக்கல் செய்திருந்த மனு குறித்தே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்துள்ளது.

இப்பத்திரிகை வெளியிடப்படும் விதம் உபாலி பத்திரிகை நிறுவனத்தின் கொள்கைக்கு எதிரானதென்று அவரது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாப்பிற்கு...

பட்டிருக்கும். எனவே, பாதுகாப்பு, உள்துறை அமைச்சுக்களின் நடவடிக்கைகளை சனாதிபதி பொறுப்பேற்றமை தொடர்பாக எவரும் வினா எழுப்ப முடியாதென அவர் மேலும் கூறியுள்ளார்.

### எமது...

மேற்கொண்டிருந்த போது அவர்களுக்கான வெளி வேலைத் திட்டங்கள் அனைத்தையும் தவளைப்பாய்ச்சலில் வீரச்சாவு அடைந்த லெப். கேணல் அன்பு மிகவும் திறமையாக மேற்கொண்டு வந்தார் என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (லோ)

### சனாதிபதி...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னரும் மக்கள் விடுதலை முன்னனியினர் சனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சுவார்த்தை சனாதிபதி மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்ற தன் பின்னரே இடம்பெற்றது. மக்கள் விடுதலை முன்னணியின் அழுத்தம் சனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்பதற்கு காரணமாக இருந்தது என அரசியல்தரப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (32)

### சனாதிபதி....

கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சந்திப்பின் போது சனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ண, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், சனாதிபதியின் ஆலோசகர் மனோதிஸ்ஸவல ஆகியோரும் சமுகமளித்திருந்தார்கள்.

இதேவேளை இச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பி.பி.சி. தமிழோசையின் கொழும்பு செய்தியாளர், அதிகார இழுபறி விடயத்தில் இரு தலைவர்களுக் கிடையிலான பிணக்கு தீர்க்கப்படாது தொடர்ந்தும் இறுக்கமான தேக்க நிலையிலேயே இருக்கிறது எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில் இச்சந்திப்புக் குறித்து பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த அமைச்சர் ஒருவர் குறிப்பிடும் போது இச்சந்திப்பின் போது சனாதிபதி பல படிகளில் இறங்கி வந்துள்ளார். பாதுகாப்பு அமைச்சு தவிர்ந்த ஏனைய இரு அமைச்சுக்களையும் மீளக்கையளிப்பதற்கும் தயார் என்பதை சனாதிபதி மறைமுகமாகக் கூறியுள்ளார்.

இதைவிட தன்னால் சமாதான முயற்சிகளை தொடர முடியாது என்றும் பிரதமர் விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சுக்களை முன்னெடுக்கும் பட்சத்தில் அதனை முன்னெடுப்பதற்கு உகந்ததான பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள சில அதிகாரங்களை வழங்கத் தான் தயாராய் இருப்பதாகவும் இச்சந்திப்பின் போது அவர் கோடிகாட்டிக் கூறியுள்ளார். மேலும் இச்சந்திப்பின் போது தேசிய நல்லிணக்க அரசு குறித்து பிரதமர் தனக்குள்ள அதிருப்தியினை வெளிக்காட்டியுள்ளார். சனாதிபதி விரும்பினால் பொ.ஐ முன்னணியின் உறுப்பினர்களையும், ஜே.வி.பி. உறுப்பினர்களையும், ஐ.தே. முன்னணி அரசிற்குள் சேர்த்துக்கொள்ள நான் தயாராக உள்ளேன் என்றும் பிரதமர் கூறியுள்ளார் என்று அந்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### முல்லை...

- நிக்சலா வயது 20 என இனங்காணப்பட்டு சடலம் எடுத்துச் செல்லப்பட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. முல்லைத்தீவு காவல் பணிமனையினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (20)

### நோர்வே...

வருகை தந்த வேளைகளில் அவர்களுடன் சந்திப்புக்களை சனாதிபதி தவிர்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை, நேற்றைய பேச்சுக்களின்போது சனாதிபதி தாம் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் காரணம் குறித்தும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நோர்வேக்கு திருப்பியழைக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டமை தொடர்பாகவும் சமாதான ஏற்பாட்டாளர்களிடம் விளக்கம் அளித்தார்.

இது இவ்வாறிருக்க நோர்வே ஏற்பாட்டாளர்கள் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் பிரதம மந்திரியுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது மற்றும் நடைமுறை அரசியல் நெருக்கடி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள்...

ஸ்திரமற்ற அரசியல் நிலைமைதான் இதற்கான காரணம் எனக் கூறியுள்ளார். எனினும் மக்கள் பயப்படத் தேவையில்லை எனவும் இது சாதாரண தற்காலிக ஏற்பாடு எனவும் கூறியுள்ளார்.

இதனிடையே புலிகளும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையே மாதம் ஒரு முறை நடைபெற்று வந்த கூட்டமும் தென் இலங்கையின் அரசியல் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அரசியல் நிலைமை சுமுகமாகிய பின்னர் இப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என அவர் மேலும் கூறியுள்ளார். (32)

## உல்லாசப் பயணிகள் பேருந்து அம்புலன்ஸ் விபத்து

### ஆறு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியும் தென்பகுதி சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்த பேருந்தும் விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று பகல்2.30 மணியளவில் புங்கங்குளம் சந்திப்பகுதியில் இவ்விபத்து இடம் பெற்றது. இச்சம்பவத்தில் மாகோ எனும் இடத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளான மாலதி (வயது38) சில்வா(80வயது) நளினா (வயது38)தீ...மமா (வயது70) கந்துகாமி(வயது50) றம்பண்டா (வயது45) என்பவர்களே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து யாழ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பொலிஸ் நிலையத்தில் சித்திரவதையால் கைதி மரணம்

### பொலிசாருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நிவிட்டிகல பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் பொலிசாரின் சித்திர வதையினால் கைதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான நபர் ஆபத்தான நிலையை யடைந்த போது இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

இவர் மீதான சித்திரவதை குறித்து இவரது உறவினர்கள் பொலிசார் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இக்கைதி மீதான பொலிசாரின் தாக்குதலைக்கண்டித்து நிவிட்டிகல பகுதி மக்கள் கடந்த இரண்டு நாட்களாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்.

இதனையடுத்து நிவிட்டிகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிசார் இரத்தின புரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

## 19ஆம் திகதிக்கு முன் பாராளுமன்றை கூட்டுமாறு எவரும் என்னைக் கோரவில்லை!

### சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா

(கொழும்பு)

இம்மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு எவ்விதவேண்டுகோளும் தனக்கு விடவில்லை என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியுள்ளார்.

அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும் பான்மையானோர் கைச்சாத்திட்ட கடிதம் ஒன்று தன்னிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டதாகவும் தற்போதைய சூழ் நிலையில் பாராளுமன்ற கூட்டங்களை நடத்துவதன் முக்கியத்துவம் அக் கடிதத்தில் வற்புறுத் தப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பொருத்தமான நேரத்தில் இவ் விடயம் தொடர்பாக அறிவித்தல் ஒன்றையும் தான் விடவுள்ளதாகக் கூறிய அவர், அரசியல் யாப்பிற்கு அமையவும், நிலையியல் கட்டளைகளுக்கு உட்பட்ட வகையிலுமே தன்னால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனக் கூறியுள்ளார்.

### திருமலை...

வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தப்பிச் சென்றது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களில் இருவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கந்தளாய் மற்றும் மூதூர் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## அவுஸ். அணி வெற்றி

(பெங்களூர்)

ரி.வி.எஸ். கிண்ண முக்கோண கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்தியாவிற்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற போட்டி ஒன்றில் அவுஸ்திரேலியா 61 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் இரண்டு விக்கற் இழப்பிற்கு 346 ஓட்டங்களை பெற்றது. இதில் கில் கிறிஸ்,பொண்டிங் ஆகியோர் சதங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் 8 விக்கட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் சச்சின் டெண்டுக்கர் 89 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.